Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 02 (15-01-1994) சனிக்கிழமை ஓசை 331

## யாழ். வைத்தியசாலையில் 1993 இல் 5999 குழந்தைகள் பிறந்தன

1993 இல் 5999 குழந்தைகள் பிறந்துள்ளதாக யாழ். வைத்தியசாலையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வைத்தியசாலையில் 1196 பேர் இறந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது கடந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் டிசம்பர் 31-ம் திகதி வரையான ஓராண்டு காலப்பகுதியில் மட்டும் யாழ். குடா நாட்டின் சில தனியார் வைத்திய சாலைகளிலும், யாழ். போதனா வைத்திய சாலையிலும் பிரசவமான குழந்தைகளின் எண்ணிக்கையே 5999 ஆகும். இதே காலப் பகுதியில் யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டும் 1196 பேர் பல்வேறு நோய்கள் காரணமாக இறந்துள்ளனர் என யாழ். போதனா வைத்தியசாலையின் பிறப்பு, இறப்பு பதிவாளர் (3ஆம் பக்கம் பார்க்க)

## சூரியகந்தவில் மீட்கப்பட்ட

# மனித எலும்புக்கூடுகள் பற்றி

# ஐ. நா. குழு விசாரிக்கவேண்டும்

## தங்கபுரம் சுற்றிவளைப்பு 4 பொதுமக்கள் கைது

(திருமலை)

திருமலை மாவட்டம் தங்கபுரத்தைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் நான்கு பொதுமக்களைக் கைது செய்துள்ளனர். கடந்த புதனன்று பள்ளிக்குடியிருப்பு முகாமிலிருந்து தங்கபுரம் பகுதியை நோக்கி வெளியேறிய படையினர் தங்கபுரம் பகுதியைச் சுற்றிவளைத்தனர்.

இப் பகுதியைச் சேர்ந்த முத்துலிங்கம் தங்கத்துரை (17), தங்கராசா வரதன் (17), வைரமுத்து ஒப்பிலாமணி (22), வைரமுத்து சிறிகுமார் (17) ஆகிய நால்வருமே கைதானவர்களாவர்.

## கொழும்பிலிருந்து றுகுணு நேற்று மாலை புறப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடக்கு நோக்கி வந்தபோது கடற்படையினரால் கொழும்பு நோக்கி திருப்பப்பட்ட றுகுணு கப்பல் கொழும்பு துறைமுகத்தில் தரித்திருப்பதாகவும் இக் கப்பலில் ஏற்றப்பட்டிருந்த பொருள்கள் அனைத்தும் மீள இறக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த புதன்கிழமை கொழும்பிலிருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்ட இந்தக் கப்பலை இடைவழியில் கடற்படையினர் திருப்பி கொழும்பு நோக்கி அனுப்பிவைத்தனர்.

இதேவேளை நேற்றுமாலை 2-30 மணியளவில் றுகுணு மீண்டும் புறப்பட்டுள்ளதாக தெரியவருகிறது

மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ்

## மனித உரிமை குழுக்கள் கோரிக்கை

(கொழும்பு)

**சூரியகந்தவில் புதைகுழிகளில் கண்டெடுக்கப்பட்ட இருபத்தியாறு மனித எலும்புக் கூடுகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு விசாரிக்க வேண்டும் என சிறிலங்காவில் இயங்கும் மனித உரிமை அமைப்புக்கள் கோரியுள்ளன.**

அண்மையில் எம்பிலிப்பிட்டிய பகுதியிலுள்ள சூரியகந்த மலைப்பகுதியில் மூன்று மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டமையும் அவற்றில் இருந்து எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டமையும் தெரிந்ததே. இவ் எலும்புக்கூடுகள் ஜே. வி. பி. கிளர்ச்சி நடாத்திய காலப்பகுதியில் அரச படைகளால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனவர்களுடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இதேவேளை இதில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் இரண்டு எம்பிலிப்பிட்டிய பாடசாலை ஒன்றிலிருந்து சிறிலங்கா அரச படைகளால் கடத்திச்செல்லப்பட்ட மாணவர்களில் இருவருடையவை என அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து இப்புதைகுழிகள் தொடர்பாகவும் கண்டெடுக்கப்பட்டுள்ள எலும்புக்கூடுகள் குறித்தும் ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் குழு விசாரணை நடத்தவேண்டும் என சிறிலங்கா மனித உரிமைக் குழுக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. இதேபோன்று இம்மனித எலும்புக்கூடுகள் தொடர்பாக சர்வதேச விசாரணைக்குழுவொன்று விசாரணை நடத்த வேண்டும் என ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக்கட்சி கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## புதைகுழியில் மீட்கப்பட்ட எலும்புகள் தெருக்களில் வீசப்படுகின்றன!

## கொழும்பில் பட்டாசு களஞ்சியத்தில் வெடிவிபத்து

### 150க்கு மேற்பட்டோர் காயம்

(கொழும்பு)

கொழும்பில் பட்டாசுத் தொழிற்சாலையொன்றில் இடம்பெற்ற வெடிவிபத்தொன்றில் பத்துப் பேர் படுகாயம் அடைந்ததுடன் ஐவர் கண்களை இழந்தனர் 150க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்,

கடந்த சில தினங்களுக்கு முன் பாமன் கடையில் நடைபெற்ற இவ் வெடிவிபத்தின் போது விற்பனைக்குத் தயாராக இருந்த பட்டாசுகளில் தற்செயலாக நெருப்புப் பிடித்துக் கொண்டதால் இவ் வெடிவிபத்து ஏற்பட்டது.

இவ் வெடிவிபத்தினால் அருகிலிருந்த திரைப்படமாளிகையில் படம் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் பதற்றம் அடைந்து வெளியேறியமையினால் ஏற்பட்ட நெரிபாட்டில் 150 க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

### பல்கலைக்கழக பட்டம் பெற்றபின்

## நாட்டைவிட்டு வெளியேறிய ஆசிரியர்கள்மீது நடவடிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று நாட்டைவிட்டு வெளியேறிய ஆசிரியர்கள் பத்தொன்பது கோடியே இருபதுலட்சம் ரூபா பிணைப் பணத்தை செலுத்த வேண்டியிருப்பதாக சிறிலங்கா அரசு தெரிவித்துள்ளது.

இத்தகைய ஆசிரியர்கள் மீண்டும் நாடுதிரும்புவதை நிர்ப்பந்திக்கும் வகையிலும், பணத்தை மீளப்பெறும் வகையிலும், பல்கலைக்கழக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் இந்தப் பிணைப் பணத்தை கட்டத்தவறிய ஆசிரியர்களில் 48பேருக்கு எதிராக பல்கலைக்கழக அதிகாரிகள் வெவ்வேறு நீதிமன்றங்களில் வழக்குகளை, தாக்கல் செய்து இருக்கின்றனர். அத்துடன் வெகு விரைவில் 69பேருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மேலும் 92பேர் தமது சேமலாப நிதியிலிருந்து இப் பணத்தை திருப்பி செலுத்த இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## வாக்குப் பெட்டி மாற்றம் ஆதாரங்கள் கிடைத்துள்ளன

(கொழும்பு)

சிறிலங்காவில் தேர்தல் நடைபெறும் போது வாக்கு பெட்டிகள மாற்றப்பட்டு வந்துள்ளதாக முன்னர் நிலவிவந்த சந்தேகத்தை உறுதிப்படுத்தும் சான்றுகள் தற்போது கிடைத்திருப்பதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்துள்ளனர் ... டிக் காட்டியுள்ளன.

இத் தூதுக்குழுவில் மேல் மாகாண சபை முதல் அமைச்சர் சந்திரிக்கா குமாரண (3ஆம் பக்கம் பார்க்க)

## டிக்சிட் ஓய்வு பெறுகிறார்

(டில்லி)

மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ்

## ஆங்கில உதவி ஆசிரியர் ஆறுபேர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட சேவைத் திட்டத்தின்கீழ் ஆங்கில உதவி ஆசிரியர் பதவிக்கு நியமனம்பெற ஆறுபேர் தகுதி அடைந்துள்ளனர்.

இவர்கள் உடனடியாக யாழ். கல்வித் திணைக்களக் கல்விப் பணிப்பாளரை சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இவர்களின் விபரம் வருமாறு: செல்வி பி ஆனந்தி (வைரவபுளியங்குளம், வவுனியா), திரு. ஆர். சண்முகசுந்தரம் (புலோலி தெற்கு, புலோலி), திரு. ஈ. கதிர்காமநாதன் (கரவெட்டி மேற்கு, கரவெட்டி), செல்வி ஜி. பி. தயாளினி (கற்கோவளம் - பருத்தித்துறை), செல்வி ஜே சாந்தகௌரி (கொழும்புவீதி. கண்டி), திருமதி எஸ். வனஜா (கொழும்பு - 9) (பா)

## பயிலுனர் ஆசிரியர்களுக்கு ஏப்பிரலில் பயிற்சி ஆரம்பம்

நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள பயிலுனர் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் ஏப்பிரல் மாதம் ஆரம்பமாகவுள்ளது.

மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ்உள்ள சுமார் 25,000 ஆசிரியர்களும், 10,000 ஆரம்ப ஆசிரியர்களும், 8000 தொண்டர் ஆசிரியர்களும் இப்பயிற்சியைப் பின்பற்றுவார்கள்.

இப்பயிற்சியின் முடிவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையும் பயிலுனர் ஆசிரியர்களுக்கே நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தெருக்களில் வீசப்படுகின்றன!

### மக்களை மிரட்டும் செயல் என்கிறார் சிறிமா

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டியவில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் மக்களை மிரட்டும் நோக்கில் பரவலாகத் தெருக்களில் வீசப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றஞ்சாட்டியுள்ளார் என பி. பி ஸி தெரிவித்தது. இதேசமயம் எதிர்க்கட்சி ஆதரவு வழக்கறிஞர் ஒருவர் மீது தாக்குதல் நடைபெற்றுள்ளதாகவும் அரசசார்பு தினசரிகளில் இச்சம்பவங்கள் குறித்து திசை திருப்பும் கட்டுரைகள் பிரசுரமாகி வருவதாகவும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

அரசே இக்கொலைகளுக்கு காரணம்எனவும் இதை மறைக்க அரச அதிகாரிகள் பெரு முயற்சி எடுப்பதாகவும் சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். உயர் மட்டம் மூலமான நெருக்கடியால் சில தினசரிகள் கூட புதைகுழி குறித்த செய்திகளைவெளியிட முடியவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரசு மனித உரிமை விடயத்தில் எத்துணை உறுதி கொண்டுள்ளது என்பதை எடுத்துக் காட்ட சந்தர்ப்பம் வழங்கியுள்ளதாகவும் இதுவரை அரசுஉதவிவழங்கும்நாடுகளுக்கு மனித உரிமையை பேணும் உறுதி வெறும்வார்த்தைகளாக இருப்பதாகவும் பி. பி. ஸி. குறிப்பிட்டது.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்துள்ளனர்.

வாக்கு பெட்டிகள் அரசாங்க மரவேலை தொழிற்சாலையில் செய்யப்படுவது வழக்கம், இவ் வாக்குப் பெட்டிகள் 200 திருத்த வேலைக்கு கொண்டுவரும் போது அதில் 60 பெட்டிகள் இப் பட்டறையில் செய்யப்படாது இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக எதிர்க் கட்சிகள் சுட்

### ஓய்வு பெறுகிறார்

(டில்லி)

இந்தியாவின் வெளிநாட்டுச் செயலாளர் ஜே, என். டிக்சிட் இம்மாதம் 31ஆம் திகதியுடன் ஓய்வுபெற இருக்கின்றார். இதையடுத்து இவரது இடத்திற்கு 1959ஆல் இந்திய வெளிநாட்டுச் சேவையில் இணைந்த கே. சிறினிவாசன் என்பவர் நியமிக்கப்பட இருப்பதாக கூறப்படுகின்றது.

## வீரச்சாவு



வீரவேங்கை சுதாஜினி

கடந்த 13ஆம் திகதி யாழ் மாவட்டத்தில் சுகவீனம்காரணமாக விடுதலைப்புலி போராளி ஒருவர் வீரச்சாவை தழுவிக் கொண்டார் வீரச்சாவடைந்த வீரவேங்கை சுதாஜினி (தர்மலிங்கம் தர்மவதனி இல 52/5 ஆனந்தம் வடலி கொழும்புத்துறை யாழ்ப்பாணம்) என்பவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### அரசியல் தஞ்ச விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட

## இலங்கை அகதிகளை திருப்பி அனுப்ப சுவிஸ் அரசாங்கம் முயற்சி

(கொழும்பு)

சுவிட்சர்லாந்தில் தஞ்சம் கோரி விண்ணப்பித்து அவ் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டோர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது இது தொடர்பான ஒப்பந்தமொன்றுக்கு இணக்கம் காணப்பட்டுள்ளது

சுவிட்சர்லாந்தில் தஞ்சம் கோரிய இலங்கையர்கள் பாதுகாப்பாக இலங்கை திரும்புவது உறுதி செய்யப்படும் என சிறிலங்கா அரசு தெரிவித்துள்ளது இது சம்பந்தமான நடைமுறை ஒழுங்கு விதிகள் குறித்து சிறிலங்காவிற்கும் சுவிட்சர்லாந்துக்கும் இடையில் காணப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஏ சி. எஸ் ஹமீட்டும் கொழும்பில் உள்ள சுவிஸ் தூதுவரும் இது தொடர்பாக உடன்படிக்கைக் குறிப்புகளை பரிமாறிக்கொண்டனர். முக்கியமாக பொருளாதாரக் காரணங்களுக்காக தஞ்சம் கோரியவர்களே இந்த ஒப்பந்தத்தின்படி திருப்பியனுப்பப்படுவர்.

குறித்த தொகையிலானவர்களை முதற்கட்டத்திற்கு அமைய திருப்பியனுப்ப ஆலோசித்த பின்னர் முடிவு எடுக்கப்படும் இத்திட்டத்தை நிறைவேற்ற யூ என். எச். சீ. ஆர் உதவி வழங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. சிறிலங்கா - சுவிஸ் அரசுகளிடையிலான தொடர்பை யூ. என். எச். சீ. ஆர் மேற்கொள்ளும்.

சுவிசில் அரசியல் தஞ்சம் கோரி 50 இலங்கைத்தமிழர்கள் சமர்ப்பித்த விண்ணப்பங்கள் சுவிஸ் அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளன. ஒரு லட்சத்து 40 ஆயிரம் .விண்ணப்பங்கள் அரசியல் தஞ்சம் கோரி சுவிஸ் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. புதிய ஒப்பந்தத்தின் படி 1992 செப்டம்பர் முதலாம் திகதியின் பின்னர் அரசியல் தஞ்சம் கோரிய அனைவரையும் திருப்பி அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேசமயம் சட்ட அமுலாக்கல அதிகாரிகளின் தீர்மானத்தின்படி நாடு திரும்புவோருக்கு எதிராக சுவிசில் தஞ்சம் கோரி திருப்பி அனுப்பப்படுபவர்கள் செய்த எந்தக் குற்றம் தொடர்பாகவும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் எனவெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

## ராணுவத்திற்கு தகவல் வழங்கிய தேசவிரோதிக்கு மரண தண்டனை

(மன்னார்)

விடுதலைப் புலிகள் தொடர்பாக வவுனியாவிலுள்ள புளொட்தேசத்துரோகக் கும்பலுக்கும், இராணுவ உளவாளிகளுக்கும தகவல்வழங்கி வந்த ஒருவருக்கு விடுதலைப் புலிகளால் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

வேளாங்குளம் மடுக்குளத்தைச் சேர்ந்த சாமுவேல் ஆறுமுகம் (இரத்தினம்) (வயது 37) என்ற மேற்படி நபர் வவுனியா சென்றுவரும் போது புளொட் தேசத்துரோகக் கும்பலுடனும், இராணுவ உளவாளிகளுடனும் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். விடுதலைப்புலிகள் இயக்கம் பற்றிய தகவல்களை தொடர்ச்சியாக இதன் மூலம் அவர் வழங்கி வந்தார். அத்துடன் விடுதலைப் புலிகள் முகாம் பற்றிய தகவல்களையும் வழங்கியதோடு பத்தாயிரம் ரூபா பணத்தையும் இவர் பெற்றுக் கொண்டுள்ளார்.

மேற்படி குற்றச் செயலுக்சாக இந் நபருக்கு நேற்று முன்தினம் மாலை 5.10மணியளவில் பண்டிவிரிச்சானில் மக்கள்முன்னிலையில் வைத்து மரண தண்டனை வழங்கப்பட்டது. மன்னார் மாவட்ட

(3ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் ஆஸ்பத்திரியில் டாக்டர் பற்றாக்குறை

மன்னார் ஆஸ்பத்திரியில் டாக்டர்களின் பற்றாக்குறை காரணமாக வெளி நோயாளர் பிரிவு ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. டாக்டர்களின் பற்றாக்குறைக்கு மத்தியில் மூன்று டாக்டர்கள் மட்டும் பெரும் சிரமத்துடன் பணியாற்றி வருவதாகவும்

(3ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### வியாபாரிகட்கு

பாடசாலை பாக்குகள், உபகரணங்கள், தரமான இமிரேசன் கோல்ட் கவரிங் நகைகள், மணப் பெண்களின் சோடனை நகைகள், லேஸ், நூல்வகைகள் அழகுசாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக் கொள்ள — ஜெயா அழகு சாதனமாளிகை, 177A, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி-8366)

### விற்பனைக்கு

YAMAHA 2000(2KV) ஜெனரேற்றரும் BRIGGS & STRATTON நீர் இறைக்கும் இயந்திரமும் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: யூட் போட்டோ, 51-4 ஆம் குறுக்கு வீதி, சின்னக் கடை.

(சி 8380)

### திருமண சேவை

மணமக்கள் தேவைக்கு தொடர்பு கொள்ளவும்- அம்பாள் திருமண சேவை- இல. 22- ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு- வாடிக்கையாளர்களுக்கு எமது பொங்கல் வாழ்த்துக்கள்.

(7225)

### திருமண சேவை

பொருத்தமான மணமகன், மணமகள் எம்மிடம் உண்டு. தொடர்பு: மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம்.

(7199)

## இம்மாதம் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்கள ஆய்வு கூடதொழில் நுட்பவியலாளர் (எம். எல். ரி) பரீட்சை இம் மாதம் 22ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளதாக யாழ். கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும் இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை இம் மாதம் 20ஆம் திகதிக்கு முன் கிடைக்காதவர்கள் யாழ் கல்வித்திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் அறிவுறுத்தப்படுகின்றனர்.

ஃ ஃ


அரச கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்க்கும் பரீட்சை

## தவறிவிட்டது

பளைக்கும் கொடிகாமத்திற்கும் இடையில் கரும் பிறவுண் கலர்பாக் ஒன்று 12-01-94 அன்று சில வேண்டிய பொருட்களுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி காவற்துறையிலோ கே சிவகுமாரன் கைதடி தெற்கு, கைதடி என்ற விலாசத்திலோ ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(சி-7230)

## 5-ம் வருட நினைவஞ்சலி



பிறப்பு: 6.01.1968

வீரச்சாவு: 15.01.1989

### மேஜர் தும்பன் / மகேந்திரன்
### (அந்தோனிப்பிள்ளை மரியதுரை)

எதிரிகுண்டை மார்பிலே ஏந்தி வீரசுவர்க்கம் எய்திய எம் இனிய தும்பனே! இறுதிவரை உறுதியுடன் போராடுவேன் என்று மார்தட்டி கூறிய வீரமறவனே! உனது இலட்சியப்பாதையில் ஒரு சிறு அடி கூட விலகாது. உனது வார்த்தை உண்மை என்று எமக்கு புரியவைத்து எம்மை நீ புரியாமல் சென்றதேனோ!

இவரின் பிரிவால் துயருறும்,

பெற்றோர், சகோதரர், மைத்துனர், மருமக்கள், உறவினர், நண்பர்கள்.

சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு. (7208)

## 31 ஆம் தின நினைவும் சபிண்டீகரண அழைப்பும்



### திரு. வேதவனம் கார்த்திகேசு
(மாமா)
நீர்வேலி தெற்கு

கடந்த 16-12-1993இல் காலமான எமது தந்தை

## யாழ் மாவட்ட நகைத்தொழிலாளர் சங்கத்தின் விஷேட பொதுக் கூட்டம்

அன்புடையீர்,

எதிர்வரும் 18-01-1994 அன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் விஷேட பொதுக் கூட்டத்திற்கு அனைத்து நகைத் தொழிலாளர்களும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி.

தலைவர் - செயலாளர்
யா/மாவட்ட நகைத் தொழிலாளர் சங்கம்

(சி-8385)

## யாழ். பல்கலைக்கழகப் புவியியற் கழகம் நடாத்தும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

அதிர்ஷ்ட நாள்: 21-01-1994 வெள்ளி; பி.ப. 4 மணி

இடம்: புவியியற்றுறை மண்டபம்

இன்று (15-01-94) இடம்பெற இருந்த இந்நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

- புவியியற் கழகம்

அன்பளிப்பு:

**பேரம்பலம் அன்கோ**
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(7223)

## ஞாபகமூட்டல்:
## பழைய மாணவர் சங்கம் யாழ். இந்துக்கல்லூரி

22-1-94:- பழைய மாணவர்கள் தினம். சகல பழைய மாணவர்களுக்கும்.


23-1-94:- வருடாந்தப் பொதுக்கூட்டம். சங்க உறுப்பினர்களுக்கு மட்டும்.

ப. மா. ச.
யா. இ. க.
94-01-13

பாலசுப்பிரமணியம் தவபாலன்,
செயலர்.

(சி-8384)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 30 - 05 -

இறப்பு: 16 - 12 -

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வது)
## கலாசாலை வீதி, திருநெல்வேலி, கோப்பாய்.

எழுதுவினைஞர்

## பதவி வெற்றிடம் - 165/88 - 14

வேதனம்.- 760 — 25 × 10 — 35 X 5 — 1185 - இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் இதர படிகளும் வழங்கப்படும்.

கல்வித்தகைமை:- அ) கூ. ச. ஊ. 14-ம் சம்பளத் திட்டத்தில் எழுதுவினைஞர் பதவியொன்றில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது

ஆ) க.பொ.த. சாதாரண பரீட்சையில் எண்கணிதம் / கணிதம் / வர்த்தக எண் கணிதம், தமிழ்மொழி உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பொது

வயது எல்லை.- வயது 20 தொடக்கம் 40க்கும் உட்பட்டதாக இருக்கவேண்டும். தற்போது கூட்டுறவுச் சங்க பணியாளர்களாக இருப்பவர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

வசிப்பிடம்:- குறைந்த பட்சம் 2 வருடங்களாவது யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

பிணைப்பணம்:- கூ. வே. ஆணைக்குழு சட்டத்திற்கமைவாக சங்கம் தீர்மானிக்கும் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

உள்ளடக்கப்பட வேண்டியவை :- கல்வி, பிறப்பு, நற்சான்று பத்திரங்களின்பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பம் ஏற்கப்படும் கடைசித் திகதி:- 25-01-1994

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபாலில் மேற்சொல்லப்பட்ட விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் பதவியின் பெயர் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

தலைவர், பொது முகாமையாளர்.
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி, கோப்பாய். (சி-8383)

## நினைவு கூருகின்றோம். 1994-01-15

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் திருகோணமலை-மூதூர், ஈச்சந்தீவுப் பகுதியில் சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

- சுதா (வி. சுதாகரன் - சேனையூர், மூதூர் - திருகோணமலை)
- வரதன் (அகிலேசபிள்ளை வரதநாதன் - மூதூர் - திருகோணமலை)
- தீபன்-கவிஞன் (நா. சந்திரசேகரம் - ஆலங்கேணி - திருகோணமலை)

தமிழீழக் கடற்பரப்பில் பயணஞ் செய்து கொண்டிருக்கையில் காணாமற் போன

- மைக்கல் (மைக்கல் லிபோன் - நாவாந்துறை - யாழ்)
- வீரா ( — வீரகுமார் - நாவாந்துறை - யாழ்)
- மோகன் ( — — நாவாந்துறை - யாழ்)

அரச கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்க்கும் பரீட்சை இம்மாதம் 22ஆம், 23ஆம், 29 ஆம், 30 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளதாக யாழ். தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் பரீட்சைத் திணைக்கள ஒழுங்கமைப்புக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

நீர்வேலி தெற்கு

கடந்த 16-12-1993இல் காலமான எமது தந்தையின் 31-ம் தின சபிண்டீகரண நிகழ்வுகள் 15-1-1994 சனி (இன்று) மு.ப. 10-30 மணியளவில் நீர்வேலி தெற்கு, கரந்தன் வீதியிலுள்ள அமரரின் இல்லத்தில் நடைபெறும்.

நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்


கரந்தன் வீதி,
நீர்வேலி,

அமரரின் பிள்ளைகள் சார்பில்;
வே. கா. கணபதிப்பிள்ளை
விரிவுரையாளர்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

(7216)

# நினைவஞ்சலி

1-ம் ஆண்டு | 3-ம் ஆண்டு



திதி
15-01-1994



அமரர்

திரு. க. வைத்திலிங்கம் | செல்வி வை. சுபதர்சினி

| | | |
|---|---|---|
| 07-10-1949 | < மலர்வு > | 17-08-1985 |
| 26-01-1993 | < உதிர்வு > | 19-10-1991 |

**எமது இதயங்களில் அழியாத ஓவியமாய் இடம்பெற்ற**


குடும்பத்தின் குல விளக்குகளே எமைவிட்டு எங்கு சென்றீர்கள்
கூட்டிச்சென்ற காலனே! எமை ஏனோ விட்டுச்சென்றாய்
அப்பாவும் மகளும் அணைத்தீர்கள் வேறுலகம் அதனால் -
அல்லும் பகலும் துடிக்கின்றோம் இவ்வுலகில் உங்கள் நினைவால்!

உங்கள் பிரிவால் துயருறும்;

ஐயன் கோவில் வீதி,
கொடிகாமம்.

மனைவி, பிள்ளைகள்,
அம்மா, சகோதரர்கள்.

(5084)

1920  1993

அமரர்

## வித்துவான் நா.சிவபாதசுந்தரனார்

(முன்னாள் மகாஜனாக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர்)

## செந்தமிழ் வளர்த்த சிவபாதசுந்தரனார்

அகவற்பா

சைவமும் தமிழும் வளர்த்திட உழைத்த
சான்றோர் பலரை ஈன்ற நற்பதி
தொல்புரம் என்னும் பல்புகழ் சேர்பதி!
அத்தகு பதியில் சான்றோர் மரபில்
தோன்றிய அறிஞர் சிவபாத சுந்தரம்,
இயல் பினில் தமிழ்ப்பற் றுடையவர் ஆதலின்
தமிழகம் சென்றே அண்ணா மலையெனும்
பல்கலைக் கழகம் தன்னிற் பயின்றே
இலக்கண இலக்கியத் தெளிவு பெற்றவர்!
பட்டம் பெற்றுத் திரும்பிய பின்னர்
மகாஜனத் தாயின் நல்லாசிரியருள்
தாமும் ஒருவராய்த் தமிழ்ப்பணி புரிந்தனர்!
மாணவர் உள்ளத்தில் தமிழ்ப்பற் றென்னும்
பயிரினை நட்டே வளர்த்திடும் முயற்சியில்
வெற்றிமேல் வெற்றி பற்பல கண்டவர்!
''ஜயஜய மாஜன'' என்றே தொடங்கும்
கல்லூரிக் கீதம் இனிதுற இயற்றினர்!
மகாஜனத் தாயின் வளர்ச்சியிற் புகழில்
ஆர்வங் கொண்டே அயரா துழைத்தனர்!
சங்கத் தமிழ்முதற் பாரதி தமிழ்வரை
சுவைத்துத் தெளிந்து மேடைகள் தோறும்
கேட்போர் உவப்பப் பேச்சுகள் நிகழ்த்தினர்!
வார இதழ்களில் மாதசஞ் சிகைகளில்
கட்டுரை கவிதை சிறப்புற எழுதினர்!
கற்றோர் உலகம் ஏற்கும் வண்ணம்
புறப்பொருள் வெண்பா மாலை என்னும்
புறப்பொருள் நூற்குச் சிறப்புறு விளக்கம்
செய்தே தீந்தமிழ்த் தொண்டுகள் புரிந்தனர்!
பொன்பொருள் தேடுதல் அறியாராகி
செந்தமிழ் வளர்த்தலே கொள்கையாய்க் கொண்டனர்!
மாணவர் போற்றிடக் கல்வியை வழங்கியும்
கற்றோர் போற்றிட ஆய்வுகள் வழங்கியும்
வாழ்ந்த அறிஞர் சிவபாத சுந்தரம்
அன்பாற் பண்பால் அறிவாற் சிறப்பால்
எங்கள் உளத்தே தெய்வமாய்த் திகழ்கிறார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

(சி-8389)

❀ **மோகன்** (— — நாவாந்துறை - யாழ்)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினராற் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ச் சிறுமி, வாழைச்சேனை, கிண்ணையடியில் சுட்டுக் கொல்லப்பட்ட 05 தமிழர்கள்.

திருகோணமலை ஆலங்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினராற் சுட்டுக் கொல்லப்பட்ட 20 தமிழர்கள்.

யாழ் - நாவற்குழிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினராற் சுட்டுக் கொல்லப்பட்டு பின் உப்புப் பாத்திக்குள்ளிருந்து சடலங்களாக மீட்கப்பட்ட 02 தமிழர்கள். புன்னாலைக்கட்டுவன் பகுதியில் உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1989ஆம் ஆண்டு யாழ் - சுழிபுரம் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**மேஜர் தும்பன்/மகேந்திரன்** (அந்தோனிப்பிள்ளை மரியதுரை. சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு)

1991ஆம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலை பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**ஜெயவந்தான்** (சிதம்பரப்பிள்ளை குணசிங்கம் - காரைதீவு - அம்பாறை)

மட்டு. குடாவெட்டை, பெருமாவெளி, 9-ம் கட்டைப் பகுதியில் பொறி வெடியில் சிக்கியதில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். ஜனதாஸ்** ( — — சித்தாண்டி - மட்டு)

யாழ் தெல்லிப்பழை டச்சு வீதியில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**பாமதி** (சாந்தி யோசப் - தோப்பூர் - திருகோணமலை)

முல்லைத்தீவு -சிலாவத்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துனருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**சந்துரு** (மலையப்பன் யோகரட்ணம் - பாரதிபுரம் விசுவமடு - முல்லைத்தீவு)

**உக்கிளஸ்-மக்கிளஸ்** (சண்முகநாதன் யோகலிங்கம் - இரணைமடுச் சந்தி - கிளிநொச்சி)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினராற் சுட்டுக் கொல்லப்பட்ட செங்கலடி - 02ஐச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்,

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

❀ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-8382)

## சிந்தனைக்கு

வீதியில் முட்களைத் தூவுபவன், வெறும் காலுடன் நடக்க முற்படக் கூடாது.

- பெஞ்சமின் ஃபிராங்க்ளின்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-01-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05

# புதைகுழியில் இருந்து அரசிற்கு அச்சுறுத்தல்!

சிறிலங்காவின் இன்றைய தலையான பிரச்சினை வடக்கு - கிழக்குப் போர் என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்கப் போவதில்லை. இந்நிலையில் இதனை ஓர் அமைச்சர் கூறித்தான் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நிலையும் இன்றில்லை. ஏனெனில் யுத்தம் இன்று தமிழ்ப் பிரதேசத்தில் மட்டுமல்ல, சிறிலங்காவின் மூலை முடுக்கெல்லாம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் ''வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் இன்று நாடு முழுவதும் தீப்பற்றி எரிகின்றது. எனவே இன்று எமது நாட்டிலுள்ள முக்கிய பிரச்சினை வடக்கு கிழக்கு யுத்தம் மட்டுமே'' என்ற தகவல் ஒலிபரப்பு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவின் பேச்சானது உள்நோக்கம் கொண்டது தென்னிலங்கையில் சூரியகந்த மலைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி உருவாக்கியுள்ள அரசியல் நெருக்கடி சூழ்நிலையை திசை மாற்றி விடும் நோக்கம் கொண்டதாகும்.

அத்தோடு அரச அதிகாரத்திலோ அன்றி பயன்களிலோ பங்கிடோ பாகப்பிரிவினையோ எதற்குமே இடம் கொடாத அரசாங்கம் இவ்விடயத்தில் மட்டும் தனது நிலைப்பாட்டை மாற்றியுள்ளது போல் தெரிகின்றது. அதாவது தான் புரிந்த படுகொலைகளுக்கு சர்வகட்சி மாநாட்டின் மூலம் எதிர்க்கட்சிகளிடமும் அனுமதி பெறப்பட்டதாகச் சாதிக்க முற்படுகின்றது. மேலும் கடந்த காலத்தில் அதாவது முதலாவது ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் கொல்லப்பட்டவர்களை ஞாபகமூட்டி மிரட்டவும் பார்க்கின்றது.

வடக்கு - கிழக்குப் போர் ஐக்கிய தேசியக்கட்சியைப் பொறுத்து இன்று தமது ஆட்சியதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கான தோன்றாகவே உள்ளது. அதாவது அரசிற்கெதிராக உருவாகும் நெருக்கடிகள் அரசாங்கத்தின் தவறுதல்களால் ஏற்படும் பாதிப்புக்கள் யாவற்றிற்கும் அரசாங்கம் வடக்கு- கிழக்குப் போரை காரணமாகக் காட்டுவதே வழமையாகிவிட்டது. போர் நிறுத்தப்படுமானால் ஐக்கிய தேசியக் கட்சி அர...

## ஒரு வார காலத்தில் 16பேர் கொலராவால் பீடிப்பு

(யாழ்ப்பாணம்)

கொலரா நோய்க்கிலக்கானவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 51பேர் இம் மாதம் 5ஆம் திகதி முதல் 11 ஆம் திகதிக்குள் சிகிச்சை பெற்றுள்ளனர் இவர்களுள் 16பேருக்கு கொலரா நோய் இருப்பது தெரியவந்ததை அடுத்து அவர்களுக்கு மேலதிக சிகிச்சை அளிக்கப்பட்டது.

யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து 10பேர் சிகிச்சை பெற்றனர். இவர்களுள் 4பேர் கொலரா நோய்க்கிலக்காகி இருந்தனர். சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து 3பேர் சிகிச்சை பெற்றனர். எவரும் கொலராவால் பீடிக்கப்படவில்லை. மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து 20பேர் சிகிச்சை பெறவந்தனர் இவர்களுள் 6பேர் நோய்க்கிலக்காகி இருந்தனர். கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து 11பேர் சிகிச்சை பெற்றனர் இவர்களுள் 5 பேர் நோய்க்கிலக்காகி இருந்தனர். தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து 7 பேர் சிகிச்சைபெற வந்தனர் ஒருவர் நோய்க்கிலக்காகி இருந்தார் என அப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கொலரா நோய்க்கிலக்காகி யாழ் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர்களில் 17 பேர் மரணமடைந்துள்ளதாகவும் மேலும் ஒருவர் கொலராவால் மரணமடைந்தாரா என்பது உறுதி செய்யப்படவில்லையெனவும் தெரியவருகின்றது (சி)

## கனடாவில் இலங்கையர் மீது 124 மோசடிக் குற்றச்சாட்டு

(ரொரன்டோ)

இலங்கையில் பிறந்து கனடாவில் குடியேறிய கனேடிய சமஷ்டி அரசாங்கத்தில் தொழில் கவுன்சிலராக கடமையாற்றிய ஒருவர்மீது 124மோசடிக் குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

ரொரன்டோவிலுள்ள ஸ்கார்பர்க்கில் கவுன்சிலராக கடமையாற்றிய கிறிஸ்டீன சிறிஸ்கந்தராசா (வயது 62) என்பவர் மீது இரண்டு லட்சம் கனேடிய டாலர்களை மோசடி செய்துள்ளதாக பல குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என படத்துடன் கூடிய முதற்பக்கச் செய்தியொன்றை ''ரொரன்டோ ஸ்டார்'' எனும் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இவருடன் மற்றொரு சந்தேகநபரான குடிவரவு ஆலோசகராக கடமையாற்றிய வெட்வான எப்டி மோல்கா மீதும் இவ்வாறான மோசடிக் குற்றச் சாட்டு சுமத்தப்பட்டது.

## கப்டன் பண்டிதர் நினைவாலயம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

கப்டன் பண்டிதரின் நினைவு நாளை யொட்டி சென்ற ஞாயிறு (9-ம் திகதி) கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் 'பண்டிதர் நினைவாலயம்' ஒன்றும் மாவீரர் படிப்பகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டன. அத்துடன் அன்றைய தினம் மாலை நினைவுக் கூட்டம் நடைபெற்றது. நாவற்குழி லவனிதா குடியிருப்புப்பொறுப்பாளர் திரு. தேவன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. செம்மணன், பண்டிதர் குடியிருப்புப் பொறுப்பாளர் திரு. அற்புதன், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் திரு. ரவி ஆகியோர் நினைவுரை நிகழ்த்தினார்கள். இந் நினைவு நாளையொட்டி பல விளையாட்டுப் போட்டிகளும் நடாத்தப்பட்டன.

(22)

## மேலும் 3200 மெ·தொன் மா எடுத்துவர ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மேலும் 3200 மெற்றிக் ... கப்பலை திருக்கோணமலைக்கு மா ஏற்றி வருவதற்கான

# ஆயுதக்கொள்வனவும் யுத்தமும் இனப்பிரச்சினைக்கு தீர்வாகாது

### பிரிகேடியர் ரஞ்சன் டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

ஆயுதக் கொள்வனவும் யுத்தமும் இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையாதென முன்னாள் தென்மாகாண இராணுவ அதிகாரி பிரிகேடியர் ரஞ்சன் டி. சில்வா தெரிவித்துள்ளார்.

'வடக்கு கிழக்கு பிரச்சினையின் பிரதிபலிப்பு' என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாங்கள் எமது பலத்தை மட்டும் அதிகரித்தால் போதாது புத்திசாலி எப்பொழுதும் மற்றவர்களின் அனுபவத்திலிருந்தும் பாடம் படிக்கின்றான். நாம் எமது பலத்தை மட்டும் அதிகரித்தால் போதாது திறமையினையும் அதிகரிக்க வேண்டும் ஆயுதங்கள் கொள்வனவு செய்வதில் மட்டும் திறமையாக இருந்தால் மட்டும் போதாது ஏனையவற்றிலும் நாம் திறமையாக இருக்க வேண்டும். இல்லையேல் எதிரிகளுக்கு ஆயுதங்களை நாம் அன்பளிப்பாக வழங்கிக் கொண்டிருப்போம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் கட்டுரையில் மேலும் தெரிவிக்கையில், நாட்டினை தொடர்ந்து யுத்தப்பாதையில் இட்டுச் சென்றால் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்து விடாது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு ஆயுதக் கொள்வனவும் நாட்டினை யுத்தப் பாதைக்கு இட்டுச் செல்வதுமல்ல எனத் தெரிவித்துள்ளார்.

## கடனடிப்படையில் வலை விநியோகம்

மாவீரர் நினைவாக பரவலாக தீவகம், காரைநகர், தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களைச்சேர்ந்த பயனாளிகளுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் கடன் அடிப்படையில் வலைகள் விநியோகிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

இத்தொடரில் 04-01-94 அன்று வடமராட்சி கிழக்கு ஒன்றிய அலுவலகத்தில், பொற்பதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தையும், மருதங்கேணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தையும் சேர்ந்த 16 பயனாளிகளுக்கு வலைகள் கடன் அடிப்படையில் விநியோகிக்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கடற்புலிகள் மாவட்ட இணைப்பாளர், முதன்மைச் செயலகப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். அத்துடன் பெரும் தொகையான கடற்றொழிலாளரும்பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## இராணுவத்தின் தாக்குதல்களால் மணலாறு பாடசாலைகள் காலவரையின்றி மூடப்பட்டன

(மணலாறு)

மணலாறு மாவட்டத்திலுள்ள அனேகமான பாடசாலைகள் இராணுவத்தினரின் கண்மூடித்தனமான செல்வீச்சை அடுத்து காலவரையறை இன்றி மூடப்பட்டுள்ளன.

இதுபற்றித் தெரியவருவதாவது: சிறிலங்கா வான்படையினர் இப்பகுதிகள் மீது மேற்கொள்ளும் கண்மூடித்தனமான வான்தாக்குதலும், முகாம்களில் இருந்து இராணுவத்தினர் மேற்கொள்ளும் செல்வீச்சுக்களுக்கும் அஞ்சி மாணவர்கள் பாடசாலைகளுக்கு வராததனை அடுத்தே அவை மூடப்பட்டுள்ளன.

சிறிலங்காப் படைகளின் கண்மூடித்தனமான இத்தாக்குதல் தொடருமானால் இக் பிரதேச மாணவர்களின் கல்வி மிகவும் பாதிக்கப்படுமென கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## விஞ்ஞானதினப் போட்டி பரிசு பெற்றோர் விபரம்

யாழ் விஞ்ஞான சங்கம் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கடந்த 11ஆம் திகதி நடாத்திய 1994ஆம் ஆண்டிற்கான விஞ்ஞானப்போட்டியில் வெற்றி பெற்றோர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

வினா-விடைப்போட்டியில் முதலாம் இடத்தை யாழ் இந்துக்கல்லூரியை சேர்ந்த மகாலிங்கம் அரவிந்தனும் இரண்டாம் இடத்தை யாழ் பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் வசந்தகுமாரும், மூன்றாம் இடத்தை யாழ்ப்பாணக்கல்லூரியைச்சேர்ந்தசக்திதாசன் அஜித்தும், ஆறுதல்பரிசுகளை யாழ். மத்திய கல்லூரியை சேர்ந்த கணேசமூர்த்தி பாலகுமார், யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி குணசேகரம் யூட் ரிறோன், யாழ் இந்துக் கல்லூரியை சேர்ந்தவர்களான குலசிங்கம் குலதீபன், சுப்பிரமணியம் முருகதாஸ், குலேந்திரசிங்கம் சிவசுதன் ஆகியோரும் யாழ் பரியோவான் கல்லூரி செல்வரட்ணம் சிறீசங்கர், யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி பஸ்தியாம்பிள்ளை றெமிஜரன் யாழேந்திரன் ஆகியோரும்,

பேச்சுப்போட்டியில் முதலாம் இடத்தை உடுவில் மகளிர் கல்லூரியை சேர்ந்த செல்வி எலிசபெத் கோசலி பவசிங்கமும் இரண்டாம் இடத்தை சுண்டிக்குளி மகளிர் கல்லூரியை சேர்ந்த செல்வி மேகலா சிவப்பிரகாசமும் மூன்றாம் இடத்தை யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்த செல்வி பிரேமலதா குணபாலாவும் பெற்றனர்.

# சுதந்திர காஷ்மீர் அமைவதை ...னா வன்மையாக எதிர்க்கும்

போரை காரணமாகக் காட்டுவதே வழமையாகிவிட்டது. போர் நிறுத்தப்படுமானால் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் நீண்ட நாள்கள் நிலைக்க முடியாது என்பதை பல அரசியல் விமர்சகர்கள் ஊர்ஜிதம் செய்கின்றனர்.

இந்த வகையிலேயே இன்று சூரியகந்த மலைப் பகுதியில் மனிதப்புதைகுழியில் இருந்து தோண்டப் படும் எலும்புக்கூடுகள் பக்கம் திசை திருப்பியுள்ளசிங்கள மக்களின் கவனத்தை யுத்தத்தின் பக்கம் திசைதிருப்ப பார்க்கின்றது. இதேவேளை இப் புதைகுழி விவகாரத்தில் எதிர்க்கட்சிகளுக்கும் பங்குண்டு எனக்காட்ட விளைகின்றது. ஆனால் இன்று அரசாங்கம் கூறுவது போல் வடக்கு கிழக்கு யுத்தம் மட்டுமல்ல, புதைகுழி விவகாரமும் பிரச்சினைதான். ஒருவேளை பிரச்சினையின் அளவில் வேறுபாடு இருக்கலாம்.

இப் புதைகுழிகளில் இருந்து தற்பொழுதே பல உண்மைகள் புலப்படத் தொடங்கிவிட்டன. எம்பிலிப்பிட்டியவில் கடத்தப்பட்ட 31 மாணவர்களின் எலும்புக் கூடுகள் சில மீட்கப்பட்டுள்ளன. இது மாணவர்களின் கொலைக்கு இராணுவமே பொறுப்பு என்பதை நிரூபிக்கப் போதுமானதாகும். இதேவேளை இளைஞர்கள் / யுவதிகள் மட்டுமல்ல, குழந்தைகள், சிறுவர்களும் கூட புதை குழியில் போடப்பட்டனர் என்பதோடு, பௌத்த குருமாரும் புதையுண்டனர் என்பதற்கும் ஆதாரங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இந்நிலையானது, ஐ. தே. க. அரசாங்கம் தமக்குத் தெரியாது என இதுவரை கைவிரித்துவந்த பல விடயங்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டிய நிலையையும், பொறுப்பேற்க வேண்டிய நிலையும் உருவாக்கியுள்ளது. இது ஐ. தே. க. அரசாங்கத்தைப் பொறுத்து பெரும் நெருக்கடிகளை தவிர்க்க முடியாமலே உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தவகையில் புதைகுழி விவகாரம் என்பது ஒரு பிரச்சினையல்ல என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடானது உண்மைகளை மூடிமறைக்கும் திட்டமிட்ட சதி நடவடிக்கையாகும். ஆனால், இதை அரசாங்கம் தான் எண்ணுவது போல மூடிமறைத்துவிட முடியாது. சில வேள்ள பழியில் தாமும் பங்கு ஏற்க வேண்டிவரும் என எண்ணி எதிர்க்கட்சிகள் பின்னடிப்பினும் அது சாத்தியமாகப் போவதில்லை. ஏனெனில் இது குறுகிய நோக்கில் பார்ப்பினும், 60,000க்குமேற்பட்ட சிங்கள இளைஞர்கள்/ யுவதிகளின் படுகொலையோடும் அவர்களின் குடும்பங்களுடனும் தொடர்புபட்ட பாரிய பிரச்சினையாகும்.

(யாழ்ப்பாணம்)

மேலும் 3200 மெற்றிக் தொன் மாவை திருக்கோணமலையில்இருந்து ''மாகோ'' கப்பல் மூலமாக எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

தற்சமயம் பருத்தித்துறையில் மாவை இறக்கிக் கொண்டிருக்கின்ற ''மாகோ'' கப்பலை திருகோணமலைக்கு மா ஏற்றி வருவதற்கான அனுமதியை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தமக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்கப்பல் மாவை இறக்கி முடித்ததும் திருக்கோணமலை சென்று மாவை ஏற்றி வரவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (பா)

விடுதலைப்புலிகளின்

# நடமாடும் மருத்துவப்பிரிவு 6000 பேருக்கு சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் நடமாடும் மருத்துவப் பிரிவினர் கடந்த இரு மாதங்களில் 6ஆயிரத்து 90 பேருக்குயாழ். குடாநாட்டில் சிகிச்சை அளித்துள்ளனர்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் இரண்டாயிரத்து ஐந்நூற்றி 38 பேருக்கும், டிசம்பர் மாதத்தில் மூவாயிரத்துஐந்நூற்றி 52 பேருக்கும் சிகிச்சை அளித்துள்ளனர்.

வலிகாமத்தில் அரியாலை கிழக்கு, உடுவில் மாதிரி வீடமைப்புத் திட்டம், சிறுப்பிட்டி மேற்கு, பொம்மைவெளி, இணுவில் சிறுவர் பராமரிப்பு பூங்காக்கள் உட்பட பல பகுதிகளிலும் இச்சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சி, சீலன் நகர், வனிதா சிறுவர் போசாக்கு பூங்கா ஆகிய பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் நடமாடும் மருத்துவப் பிரிவினர் மக்களுக்கு சிகிச்சை அளித்துள்ளனர். கடும் மழை வெள்ளத்தினால் மக்கள் அவதிப் பட்டுக்கொண்டிருந்த காலப் பகுதியிலேயே மேற்படி சிகிச்சை அளிக்கப்பட்டது. இக்காலப் பகுதியில் சுகாதாரச்சீர்கேடு காரணமாகபல தொற்று நோயால் மக்கள் அல்லலுற்றுக்கொண்டிருந்த வேளையில் மக்களுக்கு விடுதலைப் புலிகளின் நடமாடும் மருத்துவப் பிரிவு கைகொடுத்தது குறிப்பிடத்தக்கது.

# ஆரம்பப்பிரிவு ஆசிரியர் கருத்தரங்கு ஒழுங்கு

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு யாழ் கல்வித் திணைக்கள வலயம் இரண்டில் தமிழ்மொழி, கலைத்திறன் போட்டிகளில் பா ஓதல், இசை,வாய்ப்பாட்டு (அபிநயம்) நடனம் ஆகிய நிகழ்ச்சிகளில் பிரிவு ஒன்றிற்கு (ஆண்டு 4, 5) மாணவரை பயிற்றுவிக்கும் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் பின்வரும் கால அட்டவணைக்கு அமைய காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 4.30 வரை நடைபெறவுள்ளது.

இன்று உடுவில், கோப்பாய் ஆகிய கோட்டங்களிற்கு யாழ். இராமநாதன் கல்லூரியிலும் சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை ஆகிய கோட்டங்களிற்கு யாழ். மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையிலும் எதிர்வரும் 22 ஆம் திகதி கரவெட்டி கோட்டத்திற்கு யாழ் நெல்லியடி ம. ம. வித்தியாலயத்திலும் பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய கோட்டங்களிற்கு யாழ். வட இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

இக்கருத்தரங்குகளில் செயலமர்வுகளை நடாத்தும் அந்தந்தப்பகுதிகளுக்குரிய தமிழ்மொழி, ஆரம்பக்கல்வி இசை நடன பாடங்களிற்கு பொறுப்பாக உள்ள முதன்மை ஆசிரியர்களையும் வருகை தருமாறு யாழ் வடக்கு வலய கல்விப்பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

# சீனா வன்மையாக எதிர்க்கும்

## சீன அரசு தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

ஜம்மு காஷ்மீர் மாநிலம் எந்த வகையிலேனும் தனி நாடாக சுதந்திரம் பெறுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று சீனா பாகிஸ்தான் அரசிடம் எடுத்துக் கூறியுள்ளது.

சீனாவின் ஸ்திரத்தன்மையைக்குலைப்பதற்கு காஷ்மீரை அமெரிக்கா ஒரு தளமாகப் பயன்படுத்தலாம் என்று சீனா அஞ்சுவதாகவும், இதனாலேயே இத்தகைய முடிவு எடுக்கப்பட்டதாகவும், இஸ்லாமாபாத் தகவல் சாதனங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவினதும் பாகிஸ்தானினதும் வெளிநாட்டு செயலாளர்கள் அண்மையில் சந்திப்பதற்கு முன்பே சீனாவின் இந்த முடிவு இஸ்லாமாபாத்திற்கு அறிவிக்கப்பட்டு விட்டதாகவும், காஷ்மீர் பிரச்சினை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படுவதை சீனா விரும்பிய போதிலும் சுதந்திர நாடாக மாறுவதை சீனா எதிர்ப்பதாக அண்மையில் புதுடில்லிக்கும்இஸ்லாமாபாத்திற்கும் விஜயம் செய்த சீன இராணுவ தூதுகோஷ்டிகள் எடுத்துரைத்ததாகவும் மேலும் கூறப்படுகிறது.

திபெத் மூலமாகவும் ஸின்ஜியாங் மூலமாகவும் சீனாவிற்கு எதிரான நடவடிக்கையில் அமெரிக்கா ஏற்கனவே ஈடுபட்டிருப்பதாகவும் சுதந்திர காஷ்மீர் அமெரிக்காவின் மற்றுமொரு குறியாக இருக்கலாம் எனவும் சீனா தெரிவித்ததாக அண்மையில் பிரதமர் பெனாசிர் பூட்டோவுடன் பீகிங் சென்ற பாகிஸ்தான் அரசின் உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

அதாவது சுதந்திர காஷ்மீர் ஆசியாவின் இதயத்தில் உருவாகும் இஸ்ரேலாக இருக்கும் என்று சீனா கருத்து வெளியிட்டிருக்கிறது ஆப்கானிஸ்தான், தஜிகிஸ்தான், காஷ்மீர் ஆகியவற்றின் இஸ்லாமிய அடிப்படைவாதம் சீனாவின் முஸ்லிம் மாகாணங்களில் பரவலாமென சீனா அச்சம் வெளியிட்டுள்ளது

## இராணுவத்

அரசியல்துறை துணைப் பொறுப்பாளரினால் இந் நபர் புரிந்த குற்றச் சாட்டுகள் வாசிக்கப்பட்டன.

எமது போராட்டம் வளர்ச்சியடைந்து செல்லும்போது இராணுவ ரீதியாக எமது போராட்டத்தை அழிக்க முடியாதென்பதை இராணுவம் நன்கு புரிந்து கொண்டு எம் மக்கள் சிலரைப் பயன்படுத்தி எம்மைப் பற்றிய தகவல்களை பெறமுனைகின்றனர். உளவாளியை பொது மக்கள் இனம் காட்டி தருவதோடு இவ் விடயத்தில் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

## உதைபந்தாட்டம்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் வலய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மாவட்டமட்ட உதைபந்தாட்டப் போட்டியில் இன்று மட்டுவில் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் மாலை 3.00 மணிக்கு நாவற்குழி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்தாடும்மீன் விளையாட்டுக் கழகம் மோதும்.

## தேர்தல்

துங்கா உட்பட கேணல் அனுரத்த ரத்வத்த, தர்மசேன சேனநாயக்கா, எச் பி திசாநாயக்கா ஆகியோர் மேற்படி தேர்தல் ஆணையாளரை சந்தித்து மேற்படி விடயத்தை கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனர்.


## யாழ்

கந்தோர் செய்திக் குறிப்பில் இருந்து தெரியவந்துள்ளது (நி)

## மன்னார்

கூறப்படுகின்றது. இதேவேளை சமீபத்திய வெள்ளத்தை அடுத்து மன்னார் பகுதியில் நோய்கள் பரவிவருவதால் பெருந்தொகையான நோயாளர்கள் மன்னார் ஆஸ்பத்திரிக்கு படை எடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது

# 1ஆம் ஆண்டு நினைவுகள்



## தமிழ்த்தாயின் புலம்பல்

என் மகனே கிட்டு எங்கு சென்றாய்
வீரத்தின் விளை நிலமே
வீர காவியங்கள் படைத்த உன்
தினவெடுத்த தோள்கள் சரிந்தனவோ
அலை போன்ற மக்களின்
அன்பினில் திளைத்தவனே
அலைகடல் நடுவே
எரிமலையாய் வெடித்தனையோ
அன்னை என் மானத்தைக் காத்தாய்
என் மகனே!
நீ நிச்சயம் மீண்டும் -- மீண்டும் . . .
எழுந்து வருவாயடா - என்
அடிமை விலங்கொடிப்பாயடா!

## தளபதி கேணல் கிட்டு

( சதாசிவம் கிருஷ்ணகுமார் )

எமதருமை மைந்தனின்
**முதலாம் ஆண்டு நினைவு**
நிகழ்வுகளில் கலந்து கொள்ளும்
வண்ணம் அன்புடன்
அழைக்கின்றோம்.

திருமதி இராசலட்சுமி சதாசிவம்
(கிட்டம்மா)

உடையாமணல்,
வேம்பிடி,
வல்வெட்டித்துறை.

(சி-8387)

## மரண அறிவித்தல்கள்

### திரு. சுந்தரம் சின்னத்துரை

திரு. சுந்தரம் சின்னத்துரைப் பத்தர் 13-01-94 மாலை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சுந்தரம் செல்லம்மா அவர்களின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாலரெத்தினம் மற்றும் தங்கராசா, யோகம்மா, இரத்தினசிங்கம், யோகரத்தினம் (வீரசிங்கம்), யோகராசா, கமலாதேவி, விமலாதேவி, விசுவரத்தினம் (குஞ்சன்), புஸ்பரட்ணம், நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாலெட்சுமி, காலஞ்சென்ற ருக்குமணி மற்றும் இராஜேஸ்வரி, துரைராசா, அருளானந்தம், தங்கவேல், காலஞ்சென்ற சோமாவதி மற்றும் இராகினிதேவி, மாலினி, சுமதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 15-01-94 ...

## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கம் அப்புத்துரை

(ஓய்வு பெற்ற நெற்களஞ்சியப் பொறுப்பாளர்)

குமரகோட்டம், கோண்டாவிலைச்சேர்ந்த மாணிக்கம் அப்புத்துரை காலமாகிவிட்டார். அன்னார் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், பாலசாந்தினி (கனடா), வரதராஜன் (ஜேர்மனி), வசந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், பாஸ்கரதேவன், கிரிஜா, லோகீஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், சஞ்சீவ், சிவானி, ஜானகி (கனடா), கஜன், ஜெகன் (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும், மாணிக்கம் கந்தையா, மாணிக்கம் தம்பிப்பிள்ளை, மாணிக்கம் சுந்தரம்பிள்ளை, பொன்னுச்சாமி அன்னலட்சுமி, காலஞ்சென்ற மாணிக்கம் கனகலிங்கம், மாணிக்கம் இராசலிங்கம் ஆகியோரின் சகோதரரும், பொன்னுச்சாமி, நல்லருளானந்தம், பூபாலசிங்கம், பூபதி, பத்மநாதன் துரைராஜா, பாலச்சந்திரன், அரியநாயகம் ஆகியோரின் மைத்துனரும், திருமதி கந்தையா நாகம்மா ...

## தைமாத வெளிச்சம் இன்று வெளிவருகின்றது

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான வெளிச்சம் - தைமாத இதழ் - கேணல் கிட்டுவின் உருவப் படத்தை அட்டைப்படமாகக் கொண்டும், இந்திய அரசின் சதியால் வங்கக்கடலில் காவியமான கேணல் கிட்டு, லெப். கேணல் குட்டிசிறி உட்பட பத்து வேங்கைகளின் நினைவாக அவர்களின் படங்களைத் தாங்கியும் வந்துள்ளது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் ''கருத்தும், சில சிந்தனைத் தெறிப்புகளும்'' பிரம்மஞானியின் ''மனிதனும் வரலாறும்'' என்ற கட்டுரையும் மாலிகாவின் முன்பக்கக் கவிதையும் இடம்பெற்றுள்ளன. இவற்றுடன் புதுவை இரத்தினதுரை, சி. கரிகாலன், தமிழ்க்குமரன் ஆகியோரின் கவிதைகளும், பிரபல இசையமைப்பாளர் கண்ணனுடனான நேர்காணல் செவ்வியும், செங்கை ஆழியான், குரும்பசிட்டியூரான், செம்பியன் செல்வன் ஆகியோரின் சிறுகதைகளும், குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'நாடகாசிரியர் கவனத்திற்கு - சில குறிப்புகள்' என்ற கட்டுரையும், பேராசிரியர் அ. சண்முகதாஸின் மதிப்புரையும் இடம்பெற்றுள்ளன.

இது வெளிச்சத்தின் இருபத்து இரண்டாவது இதழாகும்.

## போக்குவரத்து ஒழுங்கு

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் மட்டக்களப்பு செல்வதற்கு போக்கு வரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதால் எதிர்வரும் திங்கட்கிழமை வலிகாமம் கிழக்கு வலிகாமம் மேற்குப் பகுதி மாணவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் 2மணியளவிலும் வடமராட்சிப்பகுதி மாணவர்கள் 2. 30 மணியளவில் கொடிகாமம் பஸ்நிலையத்திலும் சமுகம் தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## சடலம்

மிருசுவில் முதலைக் குளத்தில் பெண் ஒருவரின் சடலம் நேற்று கண்டெடுக்கப்பட்டுள்ளது அனலை தீவுப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து, கொடிகாமம் பகுதியில் தங்கியிருந்த திருமதி நடராசா மங்கையற்கரசி (வயது 45) என்பவருடைய சடலமே இது வென அடையாளம் காணப்பட்டது. (86)

## கப்பல் பயணிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இறங்குதுறையில்தற்போதுமாவினை இறக்கிக் கொண்டிருக்கும் மாகோ கப்பல் இன்று திருகோணமலை நோக்கிப் புறப்படும்.

இந்தக் கப்பலில் பயணம் செய்வதற்கு பதிவு செய்த பிரயாணிகள் உரிய ஆவணங்களுடன் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு முன்னர் பருத்தித்துறை இறங்குதுறைக்கு சமுகமளிக்கும்படி யாழ். அரசாங்க அதிபர் வேண்டிக்கொள்கிறார்.

## ஆசிரிய பயிற்சி ஆரம்பம்

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் 1994 ஆம் ஆண்டு தொடக்கம் பயிற்சியை மேற்கொள்ளத்தெரிவு செய்யப் பட்டவர்களுக்கான வகுப்புகள் எதிர்வரும் 17-ம் திகதி திங்கள் ஆரம்பமாகவுள்ளன. உரியவர்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கடிதம் கிடைக்காதோர் உடனடியாகக் கலாசாலை அதிபர்களுடன் தொடர்பு கொள்ளக் கேட்கப்பட்டுள்ளனர்.

## அதிபர்களுக்கான கூட்டம்

நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான கூட்டமொன்று எதிர்வரும் திங்கட்கிழமை மாலை இரண்டு மணியளவில் முகாமைத்துவ நிலையத்தில் நடாத்தப்படுமென்று நல்லூர்க்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். புகையிரத நிலைய முகாமில் தங்கியுள்ள கத்தோலிக்கமக்களுக்கான பொதுக் கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 4. 00 மணிக்கு நடைபெறும் எனவும் அனைத்து கத்தோலிக்க மக்களையும் தவறாது இதில் கலந்து கொள்ளுமாறு பங்குத்தந்தை அறிவித்துள்ளார்.

(22)

## சீமெந்து ஊழியர் கூட்டம்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

14-01-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 228

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
43-3854, 24-7078, 26-3628, 27-2049, 41-6933, 27-6769, 41-9396, 26-4885, 24-6480, 28-2345, 24-8631, 27-8160, 24 4361, 28-3735, 26-5517, 28-3429:

வடபகுதிக்குவெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
26-6274, 41-5417, 40-0770.

## காவிய நாயகன் கதைகள் கூறிடும் பாடல்கள்

## "தளராத துணிவோடு களமாடினான்"

ஆம்! காவியமான எம் மூத்த தளபதி கேணல்கிட்டுவின் பாடல்கள் அடங்கிய பாடல் தொகுப்பு

ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று 15-01-94 காலை 10 மணிக்கு பூனாறி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பூனாறி ஒழுங்கை, தகவல் :மகன்மார்,
கொக்குவில். (7233) மருமகன்.

## திருமதி பாக்கியம் சின்னத்துரை

திருநெல்வேலி தெற்கைச் சேர்ந்த திருமதி பாக்கியம் சின்னத்துரை வெள்ளிக்கிழமை(14-01-94)நேற்று காலமானார். அன்னார் அமரர் கார்த்திகேசு சின்னத்துரை (முன்னாள் புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தங்கவேலாயுதம், திருமதி இந்திராணி நாகராஜா, ராஜேஸ்வரன் (ஓய்வு பெற்ற படவரைஞர், கட்டிடத் திணைக்களம்), புஸ்பராஜா (ஓய்வு பெற்ற பட வரைஞர், கட்டிடத் திணைக்களம்) ஆகியோரின் அருமைத்தாயாரும், ரங்கநாயகி, நாகராஜா (சட்டத்தரணி), ஸ்ரீகௌரி, தர்மநாயகி ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (15-01-94) அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு பிற்பகல் 2-00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும் என அறியத்தருகின்றோம்.

தகவல்
101, பலாலி வீதி, சி. நாகராஜா
கந்தர்மடம். (7235)

## குணரத்தினம் பூபதி

புன்னாலைக்கட்டுவன் தெற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும்சுன்னாகத்தைவசிப்பிடமாகக்கொண்டவருமான குணரத்தினம் பூபதி 14-1-94அன்று மூளாயில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற குணரத்தினத்தின் (P. H. I), அன்பு மனைவியும், பவானி, காலஞ்சென்ற ஜெயராணி, ஜெயசுந்தரம் (வட இலங்கை மருத்துவக் கல்லூரி), ஜெயஸ்வரன் (சவுதி) ஆகியோரின் அன்புத் தாயாரும் வ. ஞானசம்பந்தன் அவர்களின் மாமியாரும், ஐங்கரனின் பேர்த்தியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-1-94 பி. ப. 5.00மணியளவில் மூளாயில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

''ஞானவாசா'' தகவல்: கு. ஜெயரத்தினம் (மகன்)
மூளாய், வ. ஞானசம்பந்தன் (மருமகன்)
சுழிபுரம். (7234)

துரைராஜா, பாலச்சந்திரன், அரியநாயகம் ஆகியோரின் மைத்துனரும், திருமதி கந்தையா நாகம்மாவின் அன்பு மருமகனுமாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் 15-01-94 இன்று ''வசந்தி பவனம்'' நெட்டிலிப்பாய் இல்லத்தில் பகல் 11-00 மணிக்கு இடம் பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்,

(7231) தகவல்: லோகீஸ்வரன்

## திருமதி நாகரட்ணம் யோகராஜா

[இளைப்பாறிய ஆசிரியை பரியோவான் கல்லூரி]

முன்னைநாள் பரியோவான் கல்லூரி ஆரம்ப பாடசாலை இளைப்பாறிய ஆசிரியை திருமதி நாகரட்ணம் யோகராஜா காலமானார். இவர் காலஞ்சென்ற யோகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி சொக்கலிங்கம், திருமதி சதாசிவம், திருமதி வீரசிங்கம், திரு. கனகரட்ணம், ஜேர்மனியில் வசிக்கும் திருமதி ஜெகநாதன், திருமதி ரட்ணராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் திரு. வனிதராஜனின் பெரியதாயும், இந்திராணியின் மாமியாரும், நிலானி, சிரினி, மயூரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்பட்டு இன்று பி. ப. 3.00 மணியளவில் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
547, பருத்தித்துறை வீதி, சகோதரன்
நல்லூர். (7236) சு. கனகரட்ணம்

## சேனாதிராசா அன்னரெத்தினம்

(பிரம்படி, கொக்குவில்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி சேனாதிராசா அன்னரெத்தினம் (14-01-94) நேற்று காலமானார். இவர் காலஞ்சென்ற சேனாதிராசாவின் அன்புமனைவியும்திருவெண்காடர்(C.V BAHTT), இராசலிங்கம் (சுங்கத்திணைக்களம்,) வைகுந்தநாதன் (கனடா) ஆகியோரின்அன்புத்தாயாரும் குணேஸ்வரி, ஆனந்தவல்லி, கலாரஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், றங்கநாதன், பகிரதன், பராபரன் கஜமாலா, சாயிபரன், தயாநந்தினி,சுயந்தன், திஸ்யந்தன் ஆகியோரின் பேர்த்தியுமாவர். அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று (15-01-94) காலை 10-00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறுகேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
சே. திருவெண்காடர்
(மகன்)
(7229) (C.V BAHTT)

## ஊழியர் கூட்டம்

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை சகல ஊழியர்களும் இன்று காலை 9.00 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் முக்கிய விடயங்கள் பற்றி கலந்தாலோசிப்பதற்கு தவறாது சமுகமளிக்கும்படி மேற்படி தொழிற்சாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.


## எழுச்சிப் பாடல்கள் தொகுப்பு·
### 4-ம்பாகம்

உங்களுக்காகஇன்று சகலபத்திரிகை விற்பனையாளர்களிடமும்,புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ள முந்துங்கள். குறைந்த பிரதிகளே இருப்பில் உள்ளதால் ஏமாற்றங்களை தவிர்த்துக் கொள்ள முந்துங்கள்.

(சி-8375)

உ

அம்மன்துணை

# புதுக்கடை திறப்புவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருடம் தை மாதம் 2ஆம் நாள் (15-1-1994) சனிக்கிழமை காலை 7-30 மணி முதல் 8-55 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில், உரும்பராய் சந்தியில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

# "பிரபா பல்பொருள் வர்த்தக நிலையம்"

எனும் ஸ்தாபனத்தை

திரு. முருகேசு குணரத்தினம் (S. V. M.) அவர்கள்

மங்கள விளக்கேற்ற

திரு தில்லையம்பலம் நடராசா (நொதேர்ண் றேடர்ஸ்) அவர்கள்

திறந்துவைப்பார்கள்

அத்தருணம் வாடிக்கையாளர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் கலந்து கொண்டு ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்,
''நித்தியாஸ்'' தா. சிவானந்தன் (சிவா)
சிவன் வீதி, உரும்பராய். குடும்பத்தினர்
(7227)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.